Registered as a Newspaper in Sri Lanka No. R 19

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 30

இதழ் : 10

ஆனி

1975

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- கூட்டுறவு இளைஞர் ஆண்டு
- கூட்டுறவுச் சங்கங்களும் வருமான வரியும்
- வருங்காலக் கூட்டுறவாளரை உருவாக்குவோம்
- தொழிலாளி
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்; தோற்றுவாயும் வளர்ச்சியும்
- பருவமழையும் வேளாண்மையும்
- மரம் நாட்டு விழா

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 30 | யாழ்ப்பாணம், ஆனி 1975 | இதழ் 10

## கூட்டுறவு இளைஞர் ஆண்டு

இன்று எங்கு பார்த்தாலும் இளைஞர் பற்றியே பேச்சு. இளைஞர் அமைதியின்மையைப் பற்றி அறிஞரும் பாமரரும் குறிப்பிட்டவண்ணமேயிருக்கின்றனர். இளைஞர் பயிரை வளர்ப்பதற்குப் பதில் மயிரை வளர்த்துக் கொள்கின்றாரே என்று ஒரு சாரார் அங்கலாய்க்க, மற்றொரு சாரார் இளைஞர்களைக் குறை கூறிப் பயனில்லை. சமுதாய அமைப்பே அவர்களின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணம் என வாதிடுகின்றனர்.

மேற்கத்திய நாடுகளிலே நிலவும் இளைஞர் அமைதியின்மைக்கும், இங்கு நிலவும் இளைஞர் அமைதியின்மைக்கும் வேறுபாடு உண்டு.

மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிலவி வந்த ஆன்மீக வரட்சியும், தீவிர கைத்தொழில் மயமுமே இப்பதட்ட நிலைக்கு வழிகோலியுள்ளன என பல அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், தீவிர போர்க்கோலம் பூண்ட இளைஞர் இயக்கங்களில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோர் வசதி படைத்த நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இக் காரணங்கள் அத்துணை தூரம் பொருந்தா; பொருத்தமற்ற கல்வி முறையும்

நிதானமயமாக ஏற்பட்ட வேலையின்மையும் மேற்கத்திய நாகரீகத்தின் தீய அம்சங்களின் பாதிப்புமே இங்கு இளைஞர் அமைதியின்மைக்கு வழிகோலின என்றால் அது மிகையாகாது.

1971-ல் இங்கு ஏற்பட்ட, முன்பு எப்போதும் காணப்படாத, நிகழ்ச்சிகள் மேற்படி கருத்தினை வலியுறுத்துகின்றன.

அந்நிகழ்ச்சிகளின் விளைவாக அரசாங்கம் தனது கல்விக் கொள்கைகளை மறுசீரமைக்க விழைந்தது. இளைஞரே ஒரு நாட்டின் பெறுமதி மிக்க சொத்து என்பதை உணர்ந்த அரசாங்கம் அவர்களுக்கு ஊட்டப்படும் கல்வி எமது நாட்டின் தேவைகளுக்கும், பண்பாட்டிற்கும் இசைவாக அமையவேண்டும் என்ற குறிக்கோளுடன் கல்வித் திட்டத்தில் பல பாரிய மாற்றங்களை செய்துள்ளது. தொழில் முன்னிலைக் கல்வி ஊட்டப்படுவதுடன், விவசாயம், கைத்தொழில்கள், மீன்பிடித் தொழில் ஆகியவற்றிற்கும் கல்வித்திட்டத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய மாற்றங்கள் மூலம் தொழிலின் மேன்மை உணர்த்தப்படுவதோடு பேனா பிடித்து எழுதும் வேலைதான் மேன்மையானது என்ற தவறான எண்ணத்தைத் தவிடுபொடியாக்க வழி பிறந்துள்ளது.

இப்பின்னணியில் நோக்கும் போது இவ்வாண்டை கூட்டுறவு இளைஞர் ஆண்டாகக் கூட்டுறவுத் திணைக்களம் பிரகடனம் செய்துள்ளமை மிக முக்கியத்துவம் வாய்ந்ததெனலாம். இவ்வாண்டிலே சகல கூட்டுறவுத் துறைகளிலும் இளைஞரை, குறிப்பாகப் பாடசாலை மாணவர்களை, கூடுதலாக ஈடுபடச் செய்வதே திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதற்கேற்ப திணைக்களம் மிக விரிவான ஒரு வேலைத் திட்டத்தினைத் தயாரித்துள்ளது. கூட்டுறவுத்தின விழாவைத் தவிர கட்டுரைப் போட்டிகள், மகாநாடுகள், பாடசாலைக் கூட்டங்கள், இளைஞர் பங்குபற்றும் கூட்டுறவு விரிவாக்கல் வேலைகள், கூட்டுறவுப் பண்ணைகள், தேனீ வளர்ப்புப் பண்ணைகள் ஆகியவற்றை விரிவாக்கம் செய்தல், இளைஞர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேரத் தூண்டுதல், பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்தல், சிரமதான வேலைகளில் இளைஞர்களைப் பங்குபற்றச் செய்தல் ஆகியவையே இவ்வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

இவ்வேலைத்திட்டம் செவ்வனே செயற்படுத்தப்பட்டால் இளைஞரிடையே நிலவும் அமைதியின்மை நீக்கப்படுவதுடன், வேலைவாய்ப்புக்களையும் பெருக்கி நாட்டை கட்டியெழுப்பும் ஆக்கபூர்வமான புனித பணியில் இளைஞர்களைப் பங்குபற்றச் செய்வதற்கு வழி பிறக்கும்.

# கூட்டுறவு இளைஞர் ஆண்டு

இவ்வாண்டில் அனைத்துலக கூட்டுறவுத் தினத்தை யொட்டி "இளைஞர் ஆண்டு" என்ற தலைப்பில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு முயற்சிகளின் ஒவ்வொரு துறையிலும் கூட்டுறவுக் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றில் விரிவாக்கம் செய்வதிலும் இந்நாட்டின் இளைஞர்களை ஈடுபடுத்துவதே இவ்வேலைத் திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

இவ்வேலைத்திட்டத்தின் முழுப்பயனையும் பெறும் பொருட்டு ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்ட சபைகளின் பூரண ஒத்துழைப்பைப் பெறல் வேண்டும்.

பின்வரும் முறையில் வேலைத்திட்டம் அமைதல் வேண்டும்:

(1) கூட்டுறவுத் தின விழாக்கள்.
(2) கட்டுரைப்போட்டி
(3) மகாநாடுகள்
(4) பாடசாலை மாணவர் கூட்டங்கள்
(5) பல்வேறு கூட்டுறவு விரிவாக்கல் முயற்சிகளில் இளைஞரை ஈடுபடுத்துதல்.
(6) கூட்டுறவுப் பண்ணைகளையும், தேனீ வளர்த்தலையும் விரிவாக்கம் செய்தல்.
(7) உறுப்பினர் சேர்ப்பு இயக்கங்கள்.
(8) புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்.
(9) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பைத் துரிதப்படுத்துதல்.
(10) சிரமதானம்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் ஒவ்வொன்றைப் பொறுத்தவரையிலும் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கூட்டுறவத் தின விழாக்கள்:

(1) ஒவ்வொரு நிறுவனத்திலும் கூட்டுறவுக் கொடியினை ஏற்றிவைத்தல்.

(2) அப்பகுதி ப. நோ. கூ. சங்கத்தை மையமாக வைத்து அப்பகுதிக்குப் பொருத்தமான முறையில்

விழாக்களை ஒழுங்கு செய்தல்.

(3) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அழுத்தம் கொடுத்து கூட்டுறவுத் தினவிழாக்களை ஏற்பாடு செய்தல் (விளையாட்டுப் போட்டிகள், மரங்களை நடுதல், சிரமதானம், உபஉணவுப் பயிர்களைப் பயிரிடுதல்)

(4) மாவட்ட ரீதியில் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்குப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்குவதற்கான விழாக்களை ஏற்பாடு செய்தல்.

(2) கட்டுரைப்போட்டி குறித்து ஏற்கெனவே சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(3) மகாநாடு

கூட்டுறவு இளைஞர் ஆண்டு முழுவதிலும் இம் மகாநாடுகள் ஒழுங்கு செய்யப்படலாம். சொற்பொழிவுகளை ஆற்றுவதற்கும் கீழ்க் குறிக்கப்படும் மகாநாடுகளிலே கலந்துரையாடல்களை நடாத்துவதற்கும் பல்வேறு திணைக்களங்களிலிருந்தும், கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புடைய நிறுவனங்களிலிருந்தும் பொருத்தமான சொற்பொழிவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம்.

(அ) கூட்டுறவு வாரத்தின் போது நடைபெறும் மகாநாடுகள்

மாவட்டத்திலேயுள்ள பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களோடு தொடர்பு கொண்டு கூட்டுறவு இளைஞர் ஆண்டு குறித்து கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

(ஆ) கூட்டுறவு ஆண்டிலே நடைபெறும் மகாநாடுகள்;

கூட்டுறவு இளைஞர் ஆண்டு குறித்து மகாநாடுகள் பொது மக்களுக்கும் கூட்டுறவாளருக்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும். வசதிக்கேற்ப மகாநாடுகளுக்கான திகதி, நேரம், பிரதம விருந்தினர், சொற்பொழிவாளர் ஆகியவை குறித்து தீர்மானிக்கப்படலாம்.

பங்கு பற்றுவோர்:

மாவட்டத்திலுள்ள பல்வேறு இளைஞர் நிறுவனங்களில் அங்கம் வகிக்கும் 35 வயதிற்குக் கீழ்ப்பட்ட உறுப்பினர்கள் இவற்றில்

பங்குபற்றுவதற்கு அழைக்கப்படல் வேண்டும்.

நிலைமைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப மகாநாட்டுத் திறப்பு விழாக்கள் ஒழுங்கு செய்யப்படலாம்.

(இ) மாணவர்களுக்கு:

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலுள்ள ஒரு மத்திய மகா வித்தியாலயத்தில் அல்லது மகாவித்தியாலயத்தில் கூட்டுறவு இளைஞர் ஆண்டு குறித்து கலந்துரையாடல்களை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(4) பாடசாலை மாணவருக்கான கூட்டங்கள்:

கூட்டுறவு வாரத்தில் அல்லது கூட்டுறவு ஆண்டில் பாடசாலை மாணவர் கூட்டங்களில் கூட்டுறவைப் பற்றி சொற்பொழிவு ஆற்றுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

கலந்துரையாடல்:

கூட்டுறவு வாரத்தில் முதல் அல்லது இறுதி நாளில் இக்கலந்துரையாடல் நடைபெறலாம். இக்கலந்துரையாடல் நடைபெறும்நேரம் காலையில் நடைபெறும்.

சாத்தியப்படின் கூட்டுறவுக் கொடி ஏற்றப்பட்டு, கூட்டுறவுக் கீதம் இசைக்கப்படலாம்.

சொற்பொழிவு:

இதனை ஓர் ஆசிரியரோ அல்லது வேறு யாரும் பொருத்தமானவரோ ஆற்றலாம்.

(5) இளைஞரின் ஈடுபாட்டோடு பல்வேறு கூட்டுறவு முயற்சிகளை விரிவாக்கம் செய்தல்

மாவட்டத்திலுள்ள விவசாய சிறு பொறியியல் பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இளைஞர்களுக்கான கூட்டுறவு விரிவாக்கல் முயற்சிகளை ஏற்பாடு செய்தல் வேண்டும். வசதிக்கேற்ப விளையாட்டுப் போட்டிகளும், திரைப்படக்காட்சிகளும், பல்வேறு போட்டிகளும், கலந்துரையாடல்களும் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இதற்கு அப்பகுதியிலுள்ள ப. நோ. கூ. சங்கத்தின் உதவி பெறப்படலாம்.

### (6) கூட்டுறவுப் பண்ணைகளையும், தேனீ வளர்த்தலையும் விரிவாக்கம் செய்தல்

இவற்றுடன் தொடர்புள்ள மாவட்டத்திணைக்களங்களுடனும், நிறுவனங்களுடனும் தொடர்பு கொண்டு இதற்கென ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும்.

### (7) உறுப்பினர் சேர்ப்பு இயக்கம்

ப. நோ. கூ. சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேராத எத்தனையோ பாவனையாளர் இன்னும் உண்டு. இவ்வாண்டிலே இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்வதற்குத் தூண்டும் வகையிலே ஓர் இயக்கம் நடாத்தப்படல் வேண்டும். சங்கத்தின் ஒவ்வொருகிளைக்கும் குறி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அவற்றை எய்துவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்கு விரிவான பிரசாரத்தை நடாத்துவது பொருத்தமாக இருக்கும்.

### (8) புதிய கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல்

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதிய இளம் விவசாய, மாதர், பாடசாலை, சிறு பொறியியல் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### (9) பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பைத் துரிதப்படுத்தல்:

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைக்கும் பொருட்டு இவ்வாண்டிலே ஒரு திடீர் திட்டம் தயாரிக்கப்பட்டு குறி இலக்குகளை எய்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### (10) சிரமதானம்:

ப. நோ. கூ. சங்கத்தின் சகல கிளைகளும் ஒரே விதமாகவும், கவர்ச்சியாகவும் தோற்றமளிக்கும் பொருட்டு சங்கப்பணியாளர்கள் சிரமதான முயற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டம் வகுக்கப்படல் வேண்டும். இதற்கு நெறியாளர் குழுவின் உதவியோடு நடைமுறைச் சாத்தியமான திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும்.

(கூட்டுறவு ஆக்க ஆணையாளர் அனுப்பிய சுற்றறிக்கையின் தமிழாக்கம்)

(முற்றொடர்)

# கூட்டுறவுச் சங்கங்களும் வருமான வரியும்

9.3 வரிக்குட்படுத்தப்பட்ட ஒவ்வொரு முயற்சி குறித்து, குறிப்பாக ப.நோ:கூ.சங்கம் வியாபாரக் கணக்குகளையும் இலாபநட்டக் கணக்குகளையும் தயாரிக்கும்போது சங்கத்தின் பொதுச் செலவினங்கள் குறிப்பாக தலைமைக் காரியாலய செலவினங்கள் சங்கத்தின் வெவ்வேறு முயற்சிகளுக்கு விகிதாசாரப் படி கணக்கில் வைக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் தான் ஒவ்வொரு முயற்சியின் இலாப நட்டக் கணக்கைக் கணிப்பிடுதல் வேண்டும்.

9.4 மதிப்பிழிவைப் பொறுத்தவரை இயந்திரங்கள், சாதனங்கள், 197 ம் ஆண்டில் சுவீகரிக்கப்பட்ட சிலவகைக் கட்டிடங்கள் (தொழிற் சாலைகள், தோட்டவயங்கள், உத்தியோகத்தர் பொதுநல கட்டிடங்கள் போன்றவை) ஆகியவை குறித்து சங்கங்கள் மொத்தமாக மதிப்பிழிவைப் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளன. மதிப்பிழிவு வீதங்கள் வருமாறு:

குறுகியகால ஆய்வுள்ள சாதனங்கள் — செலவுத் தொகையில் 80 வீதம்.

சாதாரண இயந்திரங்கள் செலவுத் தொகையில் $63\frac{1}{3}$ வீதம்.

நீடித்து இயங்கக்கூடிய இயந்திரங்கள் — செலவுத் தொகையில் 50 வீதம்.

கைத்தொழில் கட்டிடங்கள் செலவுத் தொகையில் 33 3/1 வீதம்.

9.5 1975-க்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தவரை அவற்றின் மதிப்பிழிவிற்கு ஏற்ப ஓராண்டிற்கு நிலையான வீதம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

9.6 மொத்தமாக மதிப்பிழிவு அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விற்கப்படும் பொழுது அல்லது இலாப நட்டக் கணக்கு அதற்கு ஏற்ப சரி செய்யப்படல் வேண்டும்.

9.7 "புதுவரி அமைப்பு 72/73" என்ற தலைப்பில் இறைவரித் திணைக்களம் வெளியிட்ட நூலினை சங்கங்கள்

இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறுமாறு வேண்டப்படுகின்றது. வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும் மதிப்பீடினைக் கணிப்பதற்கு அந்நூலிலுள்ள அட்டவணை நான்கைப் பார்க்கவும்.

10. கூட்டுறவுச் சங்கச் சட்டத்துடனும் உபவிதிகளுடனும் இணங்கிப் போதல் :

1972ல் இயற்றப்பட்ட இலக்கம் 5ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு அமைவாகச் சகல சங்கங்களும் கண்டிப்பாக நடாத்தப்படுதல் வேண்டும். குறிப்பாக சங்க நிதிகளை முதலீடு செய்யும்போது கூட்டுறவுச் சங்கச் சட்டத்தில் பகுதி 12க்கும் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதி 48க்கும் அமைவாகவும் சங்கத்தின் பொருத்தமான உபவிதிகளுக்கமைவாகவும் இம்முதலீடு நடைபெறல் வேண்டும்.

11. சங்கப் பணியாளர்களும் கூட்டுறவு வேலை கொள்வோர் ஆணைக்குழுச் சட்டமும் :

1972ல் இயற்றப்பட்ட 12-ம் இலக்கத்தைக் கொண்ட கூட்டுறவு வேலை கொள்வோர் ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமைவாக கூட்டுறவுச் சங்கங்கள் கண்டிப்பாக நடத்துதல் வேண்டும். சங்கத்திற்குப் பணியாளர்களைச் சேர்த்தல், அவர்களை வேலைக்கு அமர்த்தல் ஆகியவை குறித்து மேற்படி சட்டத்தின் பகுதிகள் 29, 30, 34 ஆகியவற்றிற்கு அமைவாகவும் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்டு மே, 12, 1972ல் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளுக்கமைவாகவும் இருத்தல் வேண்டும்.

12. செலவினங்களின் கட்டுப்பாடு :

சங்கத்தின் உபவிதிகளுக்கமைவாகவும், கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கு அமைவாகவும் சங்கத்தின் செலவினங்கள் இருப்பதைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு நெறியாளர் குழுவைச் சார்ந்ததாகும். குறிப்பிட்ட காரணங்களுக்குத் தவிர சங்கத்தின் இலாப நட்டக் கணக்கைக் கணிப்பிடுவதற்கு ஏனைய செலவினங்கள் அனுமதிக்கப்படாத நிலைமை ஏற்படலாம். எனவே உறுதிப்படுத்தும் பொறுப்பு நெறியாளர் குழுவைச் சார்ந்ததாகும்.

(ஆ) அங்கீகரிக்கப் பட்ட வேலையாளர் கோப்பித்கேற்ப பணியாளர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) சட்டத்திற்கும் உபவிதிகளுக்கமைவாகவும் அங்கீகரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்திற்கு அமைவாகவும் செலவினங்கள் இருத்தல் வேண்டும்.

(இ) கணக்குப் புத்தகங்கள் செம்மையாகவும், அதுநாள் வரையும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு துறைக்குமான செயல்வகைக் கணக்குகள் முறையே தயாரிக்கப்பட்டு பொது அலுவலகச் செலவுகள் ஒவ்வொரு துறைக்கும் விகிதாசாரப்படி பங்கீடு செய்யப்பட வேண்டும்.

(உ) வருமானவரித் திரட்டு நேரகாலத்தோடு அனுப்பப்பட்டு குற்றம் செலுத்தாவண்ணம நேரத்தோடு வரி செலுத்தப்படல் வேண்டும். உரிய திகதியில் வரியைச் செலுத்துமுகமாக போதிய பண வளங்களை சங்கம் வைத்திருத்தல் வேண்டும்.

13 நெறியாளர் குழுவின் நிருவாக சபையின் பொறுப்பு

1972ல் இயற்றப்பட்ட இல. 5ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்க சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட 37,38, 39,40,41 ஆகியவற்றைக் குறித்து சகல கூட்டுறவுச் சங்கங்களின் கவனமும் கோரப்படுகின்றது. முறைப்படி கணக்குப் புத்தகங்களையும் கணக்குகளையும் முறையே தயாரிப்பதற்குத் தவறும் ஒரு சங்கம் குறித்து மேற்கூறப்பட்ட விதிகளின் கீழ் கணக்குகள் செம்மையாக வைக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு மேற்கூறப்பட்ட விதிகளுக்கேற்ப என்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இச்சுற்றறிக்கையின் உள்ளடக்கத்தைச் சகல நெறியாளர் குழுவினருக்கும் நிருவாக சபையினருக்கும், பொது முகாமையாளர், கணக்காளர், வேறுதுறைத் தலைவர்களுக்கும் கவனத்திற் கொண்டுவரப் படுவதோடு இச்சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ள குறிப்பான உத்தரவுகளுக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணிப்புகளுக்கும் அமைவாக நடக்குமாறும் சகல பணியாளர்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டால் நான் நன்றியுடையவனாக இருப்பேன்.

14 வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படாத முயற்சிகளின் அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்

கூட்டுறவு ஆக்க ஆணையாளர்

## அட்டவணை

வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படாத சிறப்புத் தேர்ச்சி பெற்ற சங்கங்கள்

1. தெங்கு உற்பத்தி சந்தைப்படுத்தும் சங்கங்கள்.
2. றப்பர் உற்பத்தி சந்தைப்படுத்தும் சங்கங்கள்.
3. தேயிலை உற்பத்தி சந்தைப் படுத்தும் சங்கங்கள்.
4. கோழிப் பண்ணைச் சங்கங்கள்.
5. கள்ளுச் சங்கங்கள்.
6. புகையிலைச் சங்கம்.
7. இளம் விவசாயிகள் சங்கம்.
8. வடிசாலைச் சங்கம்.
9. ஏலக்காய் சங்கம்.
10. சித்ரொனெல்லா சங்கம்.
11. கடற்றொழிலாளர் சங்கம்.
12. நெசவுச் சங்கம்.
13. தச்சுத்தொழில் சங்கம்.
14. பிடித்தொழில் சங்கம்.
15. பொற்றொழிலாளர் சங்கம்.
16. தையற் தொழிலாளர் சங்கம்.
17. சிறு பொறியியல் சங்கம்
18. போக்குவரத்துச்சேவை சங்கம்.
19. கூட்டுறவுக் கிராமங்கள் கூட்டுறவுக் குடியிருப்புக்கள் அல்லது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கீழ் நிருவகிக்கப்படும் காணிகளிலுள்ள விசேட சங்கங்கள்.
20. இரத்தினக்கல் சந்தைப் படுத்தும் சங்கங்கள்.
21. எல்லா வகை உச்ச மட்டச் சங்கங்கள்.

மேற் கூறப் பட்ட சகல சங்கங்களும் அல்லது இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் சங்கங்களும் வருமானவரிக்கு உட்பட்டவை.

வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள ப. நோ. கூ. ச. முயற்சிகள்:

(அ) நுகர்வு உற்பத்திப் பொருள்களையும் சேவைகளையும் வழங்குதல்.

(ஆ) விவசாயக் கடன்களையும் இடுபொருள்களையும் வழங்குதல்.

(இ) அடைவு பிடித்தலைத் தவிர்ந்த கிராமப்புற வங்கி நடவடிக்கைகள்.

(ஈ) மருத்துவ மனைகளும், மருத்துவச் சாலைகளும்.

(உ) ஏனைய முயற்சிகள் வருமானவரிக்கு உட்பட்டவை.

# வருங்காலக் கூட்டுறவாளரை உருவாக்குவோம்

மூலம் : எஸ். எஸ். பூரி, I.A.S.
தலைமை நிர்வாகி, இந்திய தேசியக் கூட்டுறவு ஒன்றியம், புதுடில்லி
தமிழாக்கம் : 'கொங்குநாடன்'

களத்திலே அணிவகுத்துச் செல்லும்போது பிரமாண்டமானதாகவும் வெல்ல முடியாததுமாகத் தோற்றமளிக்கும் மிகப்பெரிய ராணுவங்கள் போர்க்களத்தில் மிகவும் வெட்கக்கேடான முறையிலே தோல்வியைச் சுமந்து வந்திருக்கும் நிகழ்ச்சிகள் ராணுவ வரலாற்றில் நிறைய உண்டு. அதற்கு வழங்கப்படும் காரணம், அவை வீர உணர்வற்ற வெறும் சீருடையணிந்த ராணுவம் என்பதாகும். கூட்டுறவு நிறுவனங்களைப் பொறுத்த வரையில் இந்த ஒப்புமை மிகவும் பொருத்தமுள்ளதாகும். கூட்டுறவு எண்ணமற்ற கூட்டுறவாளர்களைக் கொண்ட மாபெரும் கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைப்பது ஒரு நாட்டில் நிகழக் கூடியதுதான். புள்ளி விபரப்படி நோக்கினால், அவை மிகப்பெரிதாகத் தோற்றமளிக்கும்; ஆனால் கூட்டுறவுச் செயல் முறையில் அதன் விளைவு மிகவும் குறைவு; அதனால் ஏற்படும் தீங்கும் அதிகமாகும். வளர்ந்து வரும் நாடுகளில் கூட்டுறவாளர்களே இல்லாத கூட்டுறவு நிறுவனங்கள் உள்ள விசித்திரமான நிகழ்ச்சிக்கு நிறைய காரணங்கள் உண்டு. முதல் காரணம் அரசு அலுவலர்களின் அளவு மீறிய முனைப்பிற்கு வாய்ப்பாகும். கூட்டுறவுத் துறையின் முக்கியமான வேலை, அவசரப்பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதும், மெதுவாக அவற்றைக் கலைப்பதும்தான் என்று சில வேளைகளில் கருதத் தோன்றுகின்றது. இது, மிகைப்படுத்தப்பட்ட, நியாயமற்ற கருத்தாகத் தென்படுகிறது. எனினும், கூட்டுறவுத் துறை அலுவலர்கள் நியாயபூர்வமாக இருந்தாலும், அலுவல் நெருக்கடியால், சில அதிகாரபூர்வமான குறியீடுகளை ஏற்றுக் கொள்ள நேரிடுகிறது. பகுத்துணரும் ஆற்றல்

பெற்ற ஒரு மேல் நாட்டார் அதனைப்பற்றிக் கீழ்க் கண்ட விதத்தில் குறிப்பிட்டார். 'கீழ் நிலையில் உள்ளவர்கள் மேல்நிலையில் உள்ளவர்களை திருப்திப்படுத்தும் இயல்பான மனித நோக்குடன், நிறையப்பேர், திட்டக் குறியீடுகளை எந்த விதத்திலாவது அடைய வேண்டுமென்ற முயற்சியில் நாட்டமுள்ளவர்களாகத் தெரிகின்றார்கள். பெரும்பாலும் குடியானவர்கள் குறியீட்டுக்காக உண்டாக்கப்பட்டவர்களே தவிர, குடியானவனுக்காகத்தான் இந்தக்குறியீடு என்று அவர்கள் எண்ணியிருப்பதுபோலத் தெரிகிறது. உற்பத்தியாளர்களை ஒருசிறுகூட்டத்தை கூட்டுறவின் கீழ் கொண்டு வர வேண்டுமென்ற தனிப்பட்ட ஒருஅரசு அலுவலரின் ஆர்வத்தைத் தவிர, சில வேலைகளில் நிலச் சீர்திருத்தம் அல்லது மாநிலத்திலுள்ள சில பொருளாதாரக் கொள்கைகளைச் செயல்படுத்துதல் போன்ற செயல்களில் கூட்டுறவினைப் பயன்படுத்த முடியும். இது மாதிரி சூழ்நிலையில், கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பது. கூட்டுறவாளர்களை உருவாக்குவதினின்றும் முதலிடம் பெறுகிறது. கூட்டுறவுத்தலைமை என்ற பொருள் பற்றிய கருத்தரங்கின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் பகுதி சுவையானதாக உள்ளது. 'திட்டமிடும் கொள்கையின் விளைவாக கூட்டுறவு அமைப்புக்கள், நவீன கால இரும்புச்சட்ட அமைப்புள்ள கட்டிடங்கள் போல உள் அமைப்புகள் உருவாக்கப்பட்டபின் வெளி வடிவங்கள் கட்டப் படுகின்றன'

கூட்டுறவாளர்கள் இல்லாத கூட்டுறவு நிறுவனங்களை உருவாக்குவதில் கூட்டுறவு அதிகார வர்க்கமும் ஒரு கூறாக உருவெடுக்கிறது. வணிக மேலாண்மையில் தேர்ந்தவராகவும், கூட்டுறவுக் கொள்கையைப் பொறுத்த வரையில் தேர்ச்சியற்றவராகவும் உள்ள ஒரு பொது மேலாளரை, கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பது பற்றிக் கேட்டால் அவர் 'முதலில் பொருத்தமான இடம், தகுந்த அளவுள்ள இயந்திரங்கள், செயல்முறைக்குப் போதுமான நிதி ஆகியவற்றைக் கொடுத்தால் நான் கரும்பு வழங்கும் உறுப்பினர்களைப் பெற்றுத் தருவேன்' " என்பார். இது முழுதும் வீணான தற்பெருமையான காரியமல்ல.

எனினும், இது இயற்கையான ஒருமுறையை மாற்றியமைப்பதாகும். முதலில் நீங்கள் கூட்டுறவுக்குச் சொந்தமான சிராக அமைந்த ஒரு அலுவலைத் துவக்குங்கள். பிறகு ஆதரவாளர்களை உறுப்பினர்களாக்க முயலுங்கள்.

கூட்டுறவாளர்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்னதாகவோ அல்லது பின்னரோ வருகிறார்களா என்பதை அளவிட, கூட்டுறவு நிறுவனங்களின் செயல் முறையில் அவர்கள் வகிக்கும் இடத்தையும் பணியையும் குறிப்பிடுவது மிகவும் முக்கியமாகும். உறுப்பினர்களுடன் நடத்தும் அலுவல் கூட்டுறவு முறையின் உண்மையான பணியாகும். கூட்டுறவு முயற்சியைத் தொடர்ந்து நடாத்த சுறுசுறுப்பான கூட்டுறவு உறுப்பினர்கள் மிகவும் தேவையான அம்சமாகும் என்பது இதனால் புலனாகிறது. காலப்போக்கில், செயல்திறனுள்ள உறுப்பினர்கள் தோன்றாவிடினும், அல்லது துவக்கத்தில் ஆர்வமுடன் இருந்து பின்னர் அவ்வாறு இல்லாமல் இருப்பினும், அந்தக் கூட்டுறவு நிறுவனம் தனது முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது. சில நாடுகளில் கூட்டுறவு நிறுவனங்களில் ஆர்வமுள்ள உறுப்பினர்களின் பட்டியல் வைத்திருக்க சிறப்பான நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள் என்பது வியப்பான நிகழ்ச்சியல்ல. நியூசிலாந்தைப் போல் ஆர்வமற்ற உறுப்பினர்களின் பங்குத் தொகையைக் கட்டாயமாகத் திருப்பிக் கொடுப்பது அல்லது அமெரிக்காவில் உள்ள சுழலும்முதலீட்டுத் (Revolving capital) திட்டம் போன்றவற்றிற்கு வழி வகை செய்வது ஆகியவை அந்த நடவடிக்கைகளில் அடங்கியதாகும். டென்மார்க்கில் உள்ள விவசாய விற்பனைச் சங்கங்களின் செயல் ஆர்வமுள்ள உறுப்பினர்கள் காலப்போக்கில் மாறுதலடையும்போது, அந்த நிறுவனங்கள் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தாமாகவே கலைக்கப்பட்டு, பின்னர் செயல் ஆர்வமுள்ள உறுப்பினர்களால் மீண்டும் அமைக்கப்படுகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து ஜனநாயகக் கட்டுக் கோப்புக்குள் இணைந்து இயங்குவதால் கூட்டுறவு நிறுவனங்களின் செயல் முறையில் கூட்டுறவாளர்களின் பங்கும் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. நேர்மையும், அறிவாற்றலுமற்ற

கூட்டுறவு உறுப்பினர்களில்லாமல் இத்தகைத்துவத்திற்கு செயல்வடிவம்தர இயலாது. கூட்டுறவு அலுவல்கள் பெரிதாகவும் சிக்கலாகவும் இருப்பதால் பணிபுரியும் மேலாளர்கள் இயல்பாகவே செய்முறைகளில் முக்கியமான இடம் வகிக்கிருர்கள். பணியாளர்களுக்கு கட்டுப்பட்ட செயலாண்மையை முழுமையாக உருவாக்காவிடினும், சாதாரண கூட்டுறவாளர்கள் நிறுவனங்களின் நடவடிக்கைகளை பொறுத்தவற்றை தாம் தெரிந்துகொள்ளவும் கூட்டுறவு நிறுவனங்களைப் பாதிக்கும் முக்கியமான காரியங்களில் முடிவெடுக்கும் விஷயத்திலும் கூட்டுறவாளர்கள் தமது உரிமையை வலியுறுத்த வேண்டும். முழுத்தகவல் அறிந்த இயக்குனர் குழுவும், கண்காணிப்பாக உள்ள பொதுப்பேரவையும், அதிகாரம் மிகுந்த கூட்டுறவு அதிகார வர்க்கத்திற்கு எதிர்ச் சக்தியாக அமையும்.

பரிசீலித்துப்பார்த்தால் முடிவில் எல்லா ஜனநாயக நிறுவனங்களைப்போல, கூட்டுறவுகளின் தரமும், அதில் இணைந்துள்ள மனிதர்களின் தன்மையைப் பொறுத்துள்ளது. வெளிப்படையான கூறுகள் ஊக்க மூட்டுபவையாகவும் உதவி புரிபவையாகவும் அமையலாம். ஆனால் காலப்போக்கில், அந்த நிறுவனம் உள் ஊக்கத்தின அளவைப் பொறுத்தே வளருகிறது. கூட்டுறவு வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள் கூட்டுறவு இயக்கம்மக்களுக்காக அமைக்கப் படக்கூடாது — அது மக்களாலேயே உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை சிரமக நினைவிற்கொள்ள வேண்டும்.

**கூட்டுறவாளர்களுக்கு கல்வி:**

'முதலில் கல்வி புகட்டாமல மக்களிடம் பொறுப்பை ஒப்படைப்பது சோகமான அல்லது கேலிக் கூத்தான முடிவுக்கு வழிகோலுவதாகும்' என்று புகழ் பெற்ற அமெரிக்க வெளியீட்டாளர் ஜேம்ஸ் மெடிசன் குறிப்பிட்டார். ஜேம்ஸ் மெடிசன் இவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் அமைந்த ஜனநாயக அரசைக் கருத்திற்கொண்டிருக்க வேண்டும். எனினும், அவரது கருத்துக்கள் ஜனநாயக அமைப்புள்ள கூட்டுறவு முயற்சிகளுக்குப் பொருந்தும். கூட்டுறவு நிறுவனத்தின் உறுப்பினர்கள் தமது உரிமையை

மீறி செயல்புரிந்தால் அவர்கள் கூட்டுறவு அலுவல்களை செயலிழந்ததாக்க நேரும். அதற்கு மாறாக அவர்கள் அக்கறையில்லாமலோ விபரம் தெரியாமலோ இருப்பார்களேயானால், கூட்டுறவு ஜனநாயகம் கேலிக் கூத்தாகிவிடும். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவிலே வேளாண்மை பற்றிய அரசாங்கக் குழு (Royal Commission of Agriculture) இதனைக் கண்டறிந்து கூட்டுறவு இயக்கத்தின் நலிவுக்குக் காரணம் உறுப்பினர்களிடையே சகிப்புத்தன்மையும், உறுதியான கல்வியறிவு இல்லாமையும்' என்று கடுமையாக குறிப்பிட்டது. 'கூட்டுறவு சங்கங்களின் சட்டப் புத்தகத்தில்கொடுக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரே ஒரு வாக்கு மட்டுமென்ற உரிமையானது ஆற்றல் மிக்க ஜனநாயக நிருவாகத்திற்கு உத்திரவாதமளிப்பதாக இல்லை. உறுப்பினர்கள் எந்தச் சூழ்நிலையில் வாக்களிக்க அழைக்கப்படுகின்றார்களோ, மற்றும் அவர்கள்எவ்வாறு வாக்களிக்கின்றார்களோ அதனைச்சார்ந்தேஎல்லாம்நடக்கின்றது. என்று அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தின் (I.C.A.) கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிய குழு (Commission of co-operative Principles) கருத்துத் தெரிவித்துள்ளது. கூட்டுறவு உறுப்பினர்களுக்கு கல்வி தேவையானது என்பது தெளிவானதெனினும், அந்தக் கல்வி எத்தகையதாயிருத்தல் வேண்டும் என்பதில் நிறையக் கருத்து மாறுபாடுகள் உள்ளது. சுருக்கமாக கருதுவோமானால் உள்ளூர் கூட்டுறவு நிறுவனங்களின் செயல் முறைகளிலுள்ள சிக்கல்கள் பற்றிய கல்வியாகவும் இருக்கலாம். கூட்டுறவு பற்றிய பொதுவான கொள்கைகளை உள்ளூர் கூட்டுறவுச் சங்கத்தின் குறிப்பிட்ட சில பிரச்சினைகளில் தெளிவாக இணைந்து பயிற்றுவிப்பதும் மற்றொரு முறையாகும். சமூகத்தின் சிறப்புத் தன்மைகளைப் பொதுவாக உயர்த்திக் காட்டுவதன் நோக்கமே இன்னொரு முறையாகும். சொந்த நலத்திற்கு தேவையானது மட்டுமன்றி, பொது நலத்திற்கும் எவை வெல்லாம் தேவை என்பனவையும் அறிய கூட்டுறவு உறுப்பினர்களுக்குப் பரந்த நுண்ணறிவு தேவைப்படுகின்றது. பழைய மரபுகளையும் தப்பெண்ணங்களையும் சமாளிக்கக் கொஞ்சம் நெறிமாறுத

திட்டம் தேவைப்படுகின்றது. ஸ்வீடனில் கண்டறிந்த ஆய்வின்படி கவர்ச்சியான முறையிலே கூட்டுறவுத் தத்துவங்களைக் கற்றுத் தருவதனாலோ அல்லது கூட்டுறவின் நன்மைகளைச் சித்திரிப்பதாலோ அவநம்பிக்கைகளையும். வெறுப்புணர்ச்சியையும் மாற்ற முடியாது. அனைத்திறகும் மேலாக நெறிமுறையின் மேன்மை தேவைப்படுகின்றது. ஒற்றுமை உணர்வை கற்பிக்கவும் வலிமையுடையதாக்கவும் கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகளை மிகவும் தீவிரப்படுத்த வேண்டும்.

கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமான கூறுகளில் ஒன்று அதன் உட்பொருள் மிகவும் பொதுப்படையாகவோ, தெளிவற்றதாகவோ இருக்கக் கூடாது. மிகவும் துவக்க நிலையைத் தவிர கூட்டுறவுக் கருத்துக்களை பொதுவாகப் பேசுவதற்கு பெரும்பாலும் சுவையாகவோ பயனுள்ளதாகவோ இருக்காது. கூட்டுறவு கல்வித் திட்டம் சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தின் பிரச்சினைக்கு நெருங்கிய தொடர்புடையதாக இருக்க வேண்டும். எனவே இத் திட்டத்தின் முக்கிய பொறுப்பை பெரியதாகவும் இதறகாகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளும் அளவுக்கு நிதி நிலை வசதியுமுள்ள ஒவ்வொரு கூட்டுறவு நிறுவனத்திடமும் ஒப்படைக்க வேண்டும். அதற்கு மாற்று வழியாக உயர் மட்டத்திலுள்ள கூட்டமைப்பு முழுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். சில நாடுகளில் இது கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக மேற்கொள்ளப் படுகின்றது. பெரும்பாலும் அதன் விளைவு ஆதரவற்ற, வசதியற்ற சரியாகப் பயன்படாத சத்தற்ற திட்டமாகும்.

கூட்டுறவு உறுப்பினர் கல்வித் திட்டத்தின் உள்ளடக்கத்தை தவிர்த்து ஒரு வழி முறையைப் பின்பற்றுவதற்கான ஒருமுடிவு எடுக்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் பல்வேறு கவர்ச்சியான நுட்பச் செயல்முறைகள் வளர்ந்துள்ளன. கல்வி வட்டங்கள் அமைத்தல், தொலைக்காட்சி (Television) முதலியவற்றை நன்குபயன்படுத்துதல் ஆகியவை அந்த நுட்பத்தில் அடங்கும். வளர்ந்து வரும் நாடுகளில் இத்தகைய சில நுட்பச் செயல்களுக்கு குறைவான வாய்ப்புகளே உள்ளன. அந்த முயற்சியை விலக்கத்தக்க

அளவில் இல்லாவிடினும் உறுதியான முறையில் மேற்கொள்ள வேண்டும். உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வண்ணம் உள்ளூர் கூட்டுறவு நிறுவனங்களின் பொதுக் கூட்டம், விளக்கப்படங்கள் காட்டுதல், சிறு புத்தக வெளியீடுகள் வழங்குதல் ஆகிய நுட்பச் செயல்களை பின்பற்றலாம்.

கூட்டுறவுக் கல்வித் திட்டத்தை மேற்கொள்ளும் போது கூட்டுறவுத் துறையில் வளர்ச்சியானது அதே நிலையிலுள்ள வேளாண்மைத் துறையைவிட எல்லா வகையிலும் சிக்கலானது என்பதை நாம் உணர வேண்டும். அந்தச் சிக்கலான தன்மை கண்டுபிடிக்கமுடியாததல்ல: வேளாண்மைத் துறையில் விரிவுப்பணியாளர் தொழில் நுட்ப மாற்றங்களில் விளையும் நன்மைகளை எளிதாகச் செய்து காட்ட முடிகிறது. மேலும் வேளாண்மையில் புது முறை வேளாண்மைப் பழக்கத்திற்கெதிரான தவறான சில எண்ணங்கள் சாதாரணமாக இருப்பினும், வலிமையாக எதிர்ப்பவர்கள் இல்லை. கூட்டுறவு வளர்ச்சிப் பணிகளைப் பொறுத்த அளவில் கூட்டுறவினால் விளையும் நன்மைகளை எளிதில் காட்டமுடிவதில்லை. எப்படி இருப்பினும், சக்தி வாய்ந்த உறுதியான சுயநலவாதிகள் வட்டிக்கடைக்காரர், நகர வணிகர்கள், ஊர்வணிகர்கள் என்ற உருவில் எப்போதும் இருக்கின்றார்கள். அந்தச் சிக்கல்களைக் கீழ்க் கண்டவாறு சுருங்கச் சொல்லலாம். 'கூட்டுறவு நிறுவனங்கள் மக்களைச் சார்ந்தவை. இந்தலோகாயுத காலத்தில் அலுவல்களைக் கவனிக்கும் கருவிகள் என்று மட்டுமே அவற்றைக் கருத வேண்டியுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களை அமைக்கமுற்படும் விரிவு அலுவலர்கள் மனிதர்களின் போக்கிற்கும், நோக்கிற்கும் ஏற்றவாறு பணியில் ஈடுபட வேண்டும் என்பதைஉணரவேண்டுமேயன்றி வெறும் அமைப்பு முறைகளில் ஈடுபடலாகாது: வளர்ச்சி அலுவலர்கள் கூட்டுறவு நிறுவனங்களை அமைப்பதற்கு மட்டுமே உள்ள அதிகாரிகள் என்று தங்களை நிச்சயமாகக் கருதக்கூடாது; அதற்கும் மேலாக மக்களிடையேபணியாற்றும் கல்வி போதகர்களாகத் தங்களை எண்ணவேண்டும். கல்வி பயிற்றுவதன் மூலமாக மக்களைக் கூட்டுறவாளர்களாக ஆக்க வேண்டும். கூட்டுறவாளர்கள் இயல்பாகவே

(தொடர்ச்சி 38ம் பக்கம்)

# தொழிலாளி

கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

வையத்தி லேதொழி லாளி — தினம்
உண்மை யுற்றுநேர் வாழி
தெய்வத்திற் கேயொளி யேற்றி — நல்ல
தேசு தேடுந்திற னாளி

உய்வை நாடுமுழைப் பாளி — நாட்
டுயர்வைப் பேணுந்தொழி லாளி
மெய்யி ரத்தமொடு மேனி — கரம்
மேன்மை யுற்றுநேர் வாழி

வெய்யி லாலும்மழை யாலும் — பனி
மேவிக் கொட்டுங்குளி ராலும்
நைவி லாது அவன் மேனி — திடம்
நாட்டிப் பாடுபட வாழி

மலையி லேபசுமை யாளி — தன்
மனதி லேகசிவை யாழி
அலையி லேயிசையை ஆளி — அவன்
அசைவி னாற்பொருளை ஆளி

கற்ற றிந்தவர்கள் காட்டும் — நல்ல
கற்ப னைக்கருவை மூட்டும்
பற்று மேவுந்தொழி லாளி — அவன்
பாவ யிற்பலவிஞ் ஞானி

நிலவி லேயுலவு வோனும் — தினம்
நினைவு கொள்ளுந்தொழி லாளி
பலமி ருந்துவரின் நாடே — கொடும்
பஞ்ச மின்றிநிறை வாகும்

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்

[G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது]

1950–51ம் ஆண்டிற்கு உரிய ஆண்டறிக்கையில் கூட்டுறவு பதிவு காரியஸ்தர் திரு. S. C. பெர்னாண்டோ பின்வருமாறு எழுதினார்: "மொத்தமாக நோக்கும்போது மொத்த வியாபார சமாசங்களின் பலமும், அவற்றின் நன்நிலையும் எதிர்காலத்திற்கு நல்ல அறிகுறி எனலாம். இப்பொழுதுள்ள கூ. பொ. வி. சபைக்குப் பதிலாக உத்தேச அகில இலங்கை பாவனையாளர் சம்மேளனம் நிறுவப்பட்டதும் மொத்த வியாபார சமாசங்களின் அமைப்பு மிக்க பயனுள்ளதான உறுதியான ஒன்றாய் இருக்கும்"

உண்மையான கூட்டுறவு மொத்த வியாபார சங்கத்தை (அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்கே உரித்தான ஒரு நிறுவனம்) நிறுவக்கூடும் என்ற எதிர்பார்ப்பு பொய்ப்பித்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனிப்பட்ட சில்லறை விற்பனையாளர்களுக்கும் சேவையாற்றும் ஒரு சுதந்திர வர்த்தக நிறுவனமாக கூ. மொ. வி. வளர்ச்சி பெறலாயிற்று.

மொத்த வியாபார சமாசங்களின் வர்த்தகம் தொடர்ந்தும் அரிசி, மா, சீனி ஆகிய அடிப்படைப் பொருட்களைத் தழுவியதாகவே தொடர்ந்து அமைந்திருந்தது. கூ. மொ. வி. யிடமிருக்கும் தனியார் துறையிடமிருந்தும் அவை வேறு பொருள்களைக் கொள்வனவு செய்தன. சமாசங்களின் விற்பனைச் சுழற்சி 80 வீதத்திற்கு மேல் அரிசி, மா, சீனி ஆகியவற்றில் நடைபெற்றது. எனினும், ஆண்டிறுதியில் இவ்வீதம் ஏற்ற இறக்கம் கண்டது. கிராமப்புறப் பண்டகசாலைச் சங்கங்களும், தோட்டச் சங்கங்களும் ஏறக்குறைய 75 வீதம் அளவு இச்சமாசங்களிடமிருந்து பொருட்களைக் கொள்வனவு செய்தன என்பதை அவதானிக்கும்

போது இது வியப்பன்று. ஏனைய பொருட்களில் 12 தொடக்கம் 20 வீதம் கூ. மொ. வி. யிடமிருந்தும், தனியார் துறையிடமிருந்தும் கொள்வனவு செய்யப்பட்டது. கூ. மொ. வி. யை விட தனியார் துறை இறக்குமதியாளர் மீதும் மொத்த விற்பனையாளர் மீதும் சமாசங்கள் மேலும் தங்கியிருந்தமை கவலைக்கிடமான போக்காகத் தென்பட்டது.

1957 ல் மொத்த சமாசங்களின் வியாபார அமைப்பு வருமாறு :

| பொருள் | மொத்த விற்பனை சங்கங்களுக்கு | மற்றவர்களுக்கு | சில்லறை | மொத்தம் தொகை | வீதம் |
|---|---|---|---|---|---|
| அரிசி | 123,822 | 40,370 | 33,318 | 197,510 | 52.4 |
| மா | 5,202 | 9,399 | 1,383 | 15,984 | 4.2 |
| சீனி | 27,460 | 86,979 | 7,428 | 121,867 | 32.3 |
| புடவை | 1,276 | 2,251 | 6,701 | 10,228 | 2.7 |
| ஏனையவை | 17,663 | 5,250 | 8,819 | 31,732 | 8.4 |
| | 175,423 | 144,249 | 57,649 | 377,321 | 100.0 |

1957 ல் மொத்த வியாபார சமாசங்கள் 30 லட்சத்திற்கு மேல் லாபமடைந்தன. எந்தவொரு சமாசமும் நட்டமடையவில்லை. வெற்றியீட்டிய சமாசங்களில் சில வருமாறு :

| சமாசங்களின் பெயர் | விற்பனை 1956 | விற்பனை 1957 | சுத்தலாபம் 1956 | சுத்தலாபம் 1957 |
|---|---|---|---|---|
| 1 கொழும்பு முதலியார் பிரிவு | 12.4 | 11.0 | 73.6 | 108.4 |
| 2 ஹெவகம் கோறளை | 9,3 | 11.6 | 51.6 | 80.8 |
| 3 ,, வடக்கு 'ஏ' | 9.8 | 11.9 | 58.2 | 60.6 |
| 4 ரைகம் கோறளை | 13.7 | 13.4 | 117.7 | 100.4 |
| 5 களுத்துறை தோட்டமூலை | 9.1 | 8.2 | 50.6 | 51.0 |
| 6 மாத்தறை | 9.7 | 7.4 | 45.5 | 56.5 |
| 7 மகபலதா | 5.7 | 6.1 | 19.4 | 66.5 |
| 8 உடுகின்டா | 3.7 | 4.4 | 51.2 | 66.3 |
| 9 பதுளை | 4.8 | 4.6 | 26.5 | 50.0 |

உணவு நெருக்கடி நிலைமை ஓரளவு சீரானதும் பல்வேறு அரசாங்கக் கட்டுப்பாடுகள் தளர்த்தப் பட்டதும் கூ.மொ.வி. தாபனம் தனது சொந்தப் பலத்தில் தங்கியிருக்கவேண்டிய நிலைமை உருவாகியது. தனிப்பட்ட இறக்குமதியாளர்களோடு தொடர்பு கொண்டதோடு அது தானுகவும் இறக்குமதிகளைச் செய்யத் தொடங்கியது. மேலும் இங்கும், வெளிநாடுகளிலும் அது தனது வர்த்தகப் பிரதிநிதிகளை நியமித்தது. இங்கிலாந்திலே கூ. மொ. வி. சங்கம் அதன் முகவராக இயங்கி வந்தது.

நவம்பர் 1949ல் பாராளுமன்றம் இல. 47ஐக் கொண்ட கூ. மொ. வி. சட்டத்தை இயற்றியது. 1950 ஜுலை முதலாம் திகதியில் கூ. மொ. வி. நேரடி அரசாங்க நிருவாகத்திலிருந்து சட்ட பூர்வமாகக் பட்டதன்னுட்சி உரிமை பெற்ற நெறியாளர் குழுவின் கட்டுப்பாட்டிற்குக்கீழ் கொண்டுவரப் பட்டது. பரிசோதனை செய்யப்பட்ட அதன் கணக்குகள் பாராளுமன்றத்திறகுமுன் சமர்ப்பிக்கப் பட வேண்டும் என்ற விதி இருந்தது. முதல் நெறியாளர் குழுவின் தலைவர் கூட்டுறவு ஆக்க ஆணையாளராகும். ஏனைய ஆறு நெறியாளர்களில் நான்குபேர் உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவாளராக இருந்தனர்.

பாராளுமன்றம் இயற்றிய சட்டத்தின் படி புதிய கூ. மொ. வி. யின் பொது நோக்கங்கள் வருமாறு:

(அ) கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளைப் பெற்று அவற்றிற்கு வழங்குதல்,

(ஆ) இத்தகைய சங்கங்களுக்குத்தேவைப்படும் ஒவ்வொரு வகைப் பொருளிலும் மொத்த சில்லறை வியாபாரத்தினை நடாத்துதல்,

(இ) இத்தகைய நோக்கங்களை எய்தும் பொருட்டு, விவசாய அல்லது கைத்தொழில் அல்லது வங்கித்தொழில் அல்லது காப்புறுதித்தொழில் உட்பட வேறு ஏதேனும் வியாபாரத்தையோ,தொழிலையோ நடாத்துதல்.

ஏனைய கூட்டுறவு நிறுவனங்களைப் போன்று கூ. மொ. வி.க்கும் லாப வரியிலிருந்தும், வருமான வரியிலிருந்தும் முத்திரை பதிவு கட்டணங்களிலிருந்தும் விலக்கு அளிக்கப் பட்டிருந்தது.

வேறு பயன்களும் அரசாங்கத்தினால் கூ. மொ. வி. க்கு வழங்கப்பட்டன. அவையாவன:

(அ) குறிக்கப்பட்ட திகதிக்கு உடனே முன்னர் அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தினர் சார்பாக கூ. மொ. வியின் பொறுப்பிலிருந்த முழு வியாபாரக் கையிருப்பும் சாதனங்களும் வேறு எல்லா வகையான அசைவுள்ள ஆதனமும் புதிய நெறியாளர் குழுவிடம் சட்டப்படி ஒப்படைக்கப்பட்டன.

(ஆ) இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட வியாபாரக் கையிருப்பின் பெறுமதியில் அரைவாசி இலவசமாகவும் மற்ற அரைவாசியின் பெறுமதியில் அரைவாசியின பெறுமதி 30 ஆண்டுகளுக்குள் ஆண்டிற்கு ஒன்றரை வீத வட்டியுடன் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் கொடுக்கப்பட்டது.

(இ) ஆரம்பச் செலவுகளைச் செய்வதற்கும் தொழிற்படு முதலை வழங்குவதற்கும் அரசாங்கம் தனது இணைப்பு நிதியிலிருந்து நெறியாளர் குழுவிற்கு ரூ. 4000,000 வழங்கியது. அரசாங்கக் கடனாக புதிய கூ. மொ. வி கட்டிடங்களைக் கட்டும் பொருட்டு அரசாங்கம் நெறியாளர் குழுவிற்கு ரூ. 1520,000 வழங்கியது. இத்தொகை ஒன்றரை வீத வட்டியுடன் 30 வருடங்களுக்குள் திருப்பிக் கொடுக்கப்படல் வேண்டும்.

(ஈ) கூ. மொ. வியின் பொது ஒதுக்கீட்டின் பகுதியாக அரசாங்கம் நெறியாளர் குழுவிற்கு ரூ. 3000,000 வழங்கியது.

சங்கங்களால் நடாத்தப்படும் உண்மையான கூ. மொ. வி. சங்கமாக உருவெடுப்பதற்கு முதற்படியாக இந்நெறியாளர் குழு நிறுவப்பட்டதென கருதப்பட்டது. இந்நோக்கத்தினை மனதிற் கொண்டு கூ. மொ. வி. சட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் பரிசோதகரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அவ்வறிக்கையின் ஒரு பிரதியுடன் அவ்வாண்டிற்கான கணக்குக் கூற்றினையும், நெறியாளர் குழுவின் நிருவாகத்தினையும் அலுவல்களையும் குறித்து ஒரு அறிக்கையையும் நெறியாளர் குழு கூட்டுறவு ஆக்க ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்ற ஏற்பாடு இருந்தது.

இவை கிடைக்கப்பெற்றதும் கூட்டுறவு ஆக்க ஆணையாளர் கூட்டுறவுப் பண்டசாலைச் சங்கங்களின் பிரதிநிதிகளை கூட்டி இந்த ஆவணங்களை அவர்களின் தகவல்களுக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும் என்ற ஏற்பாடும் இருந்தது. இவ்வாறு கூட்டப்படும் பிரதிநிதிகளின் கூட்டம் பின்னர் உறுப்புரிமை வகிக்கும் சங்கங்களின் பொதுக் கூட்டமாக மாறும் என எதிர்பார்க்கப்பட்டது. இப்பொதுக்கூட்டமே எதிர்காலத்தில் கூட்டுறவு மொத்த வியாபாரசங்கத்தின் இறுதி நிருவாக சபையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

1951-ம் ஆண்டளவில் கூ. மொ. வி. யின வருடாந்த விற்பனை ரூ. 9 கோடிக்கு மேலாக இருந்தது. ஒவ்வொரு ஆண்டும் அதன் விற்பனவு அதிகரித்துக் கொண்டே சென்றது. 1951-ம் ஆண்டு ஜூலையில் புதிதாக கூ. மொ. வி. ஒரு காப்புறுதிப் பகுதியைத் திறந்து வைத்தது. ஏப்ரல் 1952-ல் அச்சகப்பகுதி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

1955-ம் ஆண்டு இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் நிறுவப்பட்டதும் அச்சம்மேளனத்திலிருந்தும் மூன்று உறுப்பினர்களை கூ. மொ. வி. நெறியாளர் குழுவிற்கு நியமிப்பதற்கு வழிவகுக்கும் பொருட்டு கூ. மொ. வியின் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு இருந்தபோதிலும் கூ. மொ. வி. மிகவும் விரைவாக சுதந்திரமான வணிக கூட்டுத் தாபனமாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. அதற்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே இருந்த உறவுகள் வளரத் தொடங்கின. அரிசி, மா, சீனி ஆகியவற்றைத் தவிர சங்கங்கள் கூ. மொ. வியிடமிருந்து கொள்வனவு செய்த அளவிற்கு தனியார் துறையிடமிருந்தும் கொள்வனவு செய்தன.

(தொடரும்)

# பருவமழையும் வேளாண்மையும்

(டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்)

(பிரதம நெறியாளர், இந்திய ஆராய்ச்சிக் கழகம்)

இந்த ஆண்டு பருவமழை ஒரு ஒழுங்குடன் பெய்யவில்லை. ஆரம்பத்தில் இது சில பகுதிகளில் 20 முதல் 45 நாட்கள் காலம் கடந்து பெய்தது. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பீஹார், கிழக்கு உத்திரப் பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் பருவ மழை அளவுக்கு மீறிப் பெய்து வெள்ளப்பெருக்கை உண்டாக்கி நாசம் விளைவித்தது. பல இடங்களில் செப்டம்பர் மாதத்தில் மழை சிறிதுகூட இல்லை. இருப்பினும் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், மஹாராஷ்டிரம், மேற்கு மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பல இடங்களில் அக்டோபர் இரண்டாம் வாரம் முதல் சுமார் 10 செண்டிமீட்டரும் அதற்கு மேலும் மழை பெய்துள்ளது. குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களிலும் சில பகுதிகளில் நல்ல மழை பெய்திருக்கிறது.

வங்காள விரிகுடாவில் தோன்றி மேற்கு வடக்கு மேற்காக சென்று மத்திய இந்தியாவிலும், மேற்கு இந்தியாவிலும் மழை பொழிவிக்கின்ற பருவக் காற்றுகள் இந்த ஆண்டு மிகத் தாமதமாகவே ஏற்பட்டன. அதன் காரணமாக மஹாராஷ்டிர மாநிலத்தில் மராத்வாடா பகுதியிலும், ராஜஸ்தானில் சில பகுதியிலும் அக்டோபர் மாதத்தில் வழக்கமாகப் பெய்யும் மழையைவிட 5 முதல் 8 மடங்கு அதிகமான மழை பெய்திருக்கிறது. இந்தப் பகுதிகளில் வழக்கத்திற்கு விரோதமாக மழை அதிக நாட்கள் நீடித்தும் இருந்திருக்கிறது.

இப்படிச் சில இடங்களில் ஒழுங்கற்ற முறையி

லும், சில இடங்களில் வழக்கத்திற்கு மாறாகவும், அளவுக்கு மீறியும் பெய்து இருப்பதனால் இந்த ஆண்டு வேளாண்மையில் சில மாற்றங்களைக் கையாண்டு பிரச்சினைகளைச் சமாளித்தாக வேண்டும். ஒவ்வொரு பகுதிக்கும் எப்படிப்பட்ட மாற்றங்கள் வேண்டுமென்பது அவ்வவ்விடத்தில் உள்ள நிலைமைகளை வைத்துக் கணிக்கப்படவேண்டிய ஒன்றாகும். எல்லா இடத்திற்கும் ஒரே பொதுவான சிபாரிசுகளைச் செய்வது இயலாதது. எனினும், இங்கே குறிப்பிடப்படும் சில ஆலோசனைகளை விவசாய விரிவு அலுவலர்கள் கவனத்தில் கொண்டு இடத்திற்குத் தகுந்தபடி அவற்றை விவசாயிகளுக்குக் கூறி நடைமுறைப்படுத்தச் செய்ய வேண்டும்.

இந்த ஆண்டு அதிர்ஷ்டவசமாக கரிசல் மண் உள்ள பிராந்தியங்கள் பலவற்றில் நல்ல மழை பெய்திருக்கிறது. இந்த நிலங்கள் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும் ஆற்றலை உடையன. ஆழமில்லாத கரிசல் மண் பிராந்தியங்களில் சாதாரணமாக "காரீப்" பருவத்தில் மட்டும்தான் பயிரிடுவது வழக்கம். ரபிப் பருவத்தில் பயிரிடப் போதுமான அளவு ஈரப் பதம் அதில் இருக்காது. ஆனால், இந்த ஆண்டில் இப்பிராந்தியங்கள் பலவற்றில் மழை பெய்திருப்பதால் ரபி பருவத்திலும் பயிர் செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விடங்களில் சி. எஸ். ஹெச்-1 போன்ற வீரிய ரக சோளத்தை முந்திய பட்டத்தில் விவசாயிகள் பயிரிட்டிருந்தால் அதனை நிலத்தையொட்டி வெட்டி அறுவடை செய்தபின் அதில் அடுத்து ஒரு மறுதாம்புப் பயிருக்கு களையெடுத்தபின் ஹெக்டாருக்கு 10 முதல் 0 கிலோ கிராம் நைட்ரஜன் உரமிட்டால் மிகவும் நல்ல மகசூல் கிடைக்கும். இப்படி ஒரு மறுபயிர் உண்டாக்க முடியாத இடங்களில் குசும்பா அல்லது கடுகு முதலிய பொருத்தமான எண்ணெய் வித்துப் பயிரையோ அல்லது பசைப் பயறு. கேசரிப் பருப்பு முதலிய ஏதாவது பருப்பு வகைகளையோ பயிரிடலாம்.

தாமதித்து அறுவடையாகக் கூடிய சோள ரகங்களைப் பயிரிட்ட இடங்களிலும்கூட ரபிப் பருவத்தில்

எண்ணெய் வித்துக்கள் அல்லது பருப்பு வகைகளில் ஒன்றை ஊடு பயிராகப் பயிரிட்டுப் பயன் பெறலாம்.

சமீபத்திய மழை காரணமாக ஈரப்பதம் தங்கியிருக்குமிடங்களில் பூச்சி, பூஞ்சாணம் முதலியவற்றின் தொல்லைகள் ஏற்படலாம். எனவே, இச்சமயத்தில் பூச்சி பொட்டுக்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

சமீபத்தில் ஏற்பட்ட மழையால் ரபிப் பயிருக்குத்தான் அதிகமான நன்மைகள் உண்டாகும். சாதாரணமாக இப்பருவத்தில் அதிக மகசூல் தரும் வித்துக்களைப் பயிரிட்டு நிறைந்த மகசூல் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகிய எந்தப் பயிருக்கும் இந்நிலை பொருந்தும்.

உதாரணமாக ஒன்றைக் காட்டலாம். 1971-72ம் ஆண்டில் நம்முடைய நாட்டின் எண்ணெய் வித்து உற்பத்தி 88 லட்சம் டன்னிஸ்ஸாக இருந்தது. அதில் 23. லட்சம் டன்னிஸ் எண்ணெய் வித்து ரபிப் பருவத்தில் விளைவிக்கப்பட்டதாகும். அதாவது அவ்வாண்டின் மொத்த எண்ணெய் வித்து உற்பத்தியில் 26·6 சதவீதம் ரபிப் பருவத்தில் விளைந்திருக்கிறது. 1972—73-ல் எண்ணெய் வித்து உற்பத்தி 67·5 லட்சம் டன்னிஸ்ஸாகக் குறைந்து விட்டது. அப்படியிருந்தும் அந்த ஆண்டில் ரபிப் பருவ எண்ணெய் உற்பத்தி 26.7 லட்சமாக இருந்திருக்கிறது. அதாவது எண்ணெய் உற்பத்தி குறைந்துபோன 1972-73-ம் ஆண்டில் ரபிப் பருவ விளைச்சல் 38 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. இதே போல அரிசி உற்பத்தியின் புள்ளி விவரங்களை நோக்கினாலும் ஒவ்வொரு ஆண்டிலும் ரபிப் பருவத்திலும், கோடைப் பருவத்திலும்தான் காரிப் பருவத்தைவிட விளைச்சல் அதிகமாக இருப்பது தெரியவரும். இந்த அனுபவத்தை மறவாமல் நடப்பு ரபிப் பருவத்தில் உற்பத்தியை முழு அளவு பெருக்குவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ளவேண்டும்.

பயிர் நெருக்கமாக இல்லாவிடில் மகசூல் குறை

யும். ஆகையால், போதிய வரை விதைகளை அதிகமாக விதைத்துப் பயிரில் நெருக்கம் இருக்கும் படி செய்ய வேண்டும்.

நெல்லைப் பொறுத்த வரை நடவுக் காலத்தை முந்தச் செய்தால் ரபிப் பருவ வேளாண்மையில் கணிசமான மகசூல் கிடைக்குமென்று கண்டறியப்பட்டிருக்கிறது. ஆந்திரப் பிரதேசத்தில் இது பற்றி நடத்திய பரிசோதனைகளில் ரபிப் பருவப் பயிருக்கு டிசம்பர் மாதத்திலேயே நடவை ஆரம்பித்து விடுவது நல்லதென்று தெரியவந்தது.

கோடைப் பருவப் பயிருக்குக் கதிர் முதிரும் சமயத்தில் அதிகமான வெப்பமில்லாமல் இருந்தால் விளைச்சல் நன்றாயிருக்குமாதலால் அப்பருவத்தில் விரைவில் பலன் தரக்கூடிய நெல் ரகங்களையே விதைக்க வேண்டும். ரபிப் பருவத்திலும் விரைவில் பலன் தரக்கூடிய வித்து ரகங்களைத் தேர்ந்தெடுத்து காலா காலத்தில் நட்டுவிட வேண்டும். கோடைப் பருவத்திற்கு வேண்டிய வித்துக்களை இப்போதே சேகரித்து விவசாயிகளுக்கு உரிய காலத்தில் விநியோகிப்பது விவசாய விரிவு அலுவலர்களின் கடமையாகும்.

இந்த ஆண்டு உரங்களின் விலை உயர்ந்திருக்கின்றது. எனவே, வயலுக்கு இடும் உரத்தின் பலனைக் கூடிய வரை அதிகரிக்கச் செய்வதில் விவசாயிகள் இறமையாகக் கவனம் செலுத்த வேண்டும். பொதுவாக நீர் நிருவாகம், உரிய காலத்தில் களையெடுத்தல், பூச்சி பூஞ்சாணம் வராமல் தடுத்தல் முதலிய நடவடிக்கைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்தால் இட்ட உரத்தில் பலன் சேதமின்றிக் கிடைக்கும். இரசாயன உரங்களை மண்ணில் வேண்டிய ஆழத்தில் இடுதல். மேலுரம் இடுவதற்கு உரிய காலத்தையும், முறைகளையும் ஒழுங்காக அறிந்து கடைப்பிடித்தல், போதிய அளவு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் முதலிய சத்துக்கள் கலந்து இருக்கும்படி இரசாயன உரங்களை சமன் செய்து வயலில் இடுதல், தேவையான இடங்களில் வயலுக்குத் தேவைப்படும் சிறு மூலகங்களும் போதிய அளவு உரத்தில் கலந்து இருக்கும்படி கவனித்துக் கொள்ளுதல் என்று இப்படிப்பட்ட பல்வேறு விவசாய நுணுக்கங்களையும்

விவசாயிகளுக்கு அடிக்கடி போதித்துக் கொண்டேயிருக்கவேண்டும். பல வெளி நாடுகளில் வானொலி மூலம் இச்செய்திகளை விவசாயிகளுக்கு ஒலி பரப்பித் தெரிவிக்கிறார்கள். விதைப்புக் காலங்களில் நாளொன்றில் 30–40 முறை கூட இதுபற்றிய நுணுக்கங்களைப் பருவத்திற்கும், இடத்திற்கும் ஏற்றபடி மிகக் கச்சிதமாக கணித்து ஒலி பரப்புகிறார்கள்.

இந்தியாவில் இவ்வித மான பணிகளில் விவசாய மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு கொண்டு பல இடங்களுக்கும் வேறு விவசாயிகளுக்குத் தக்க ஆலோசனைகள் கொடுக்க முடியும். அது நாட்டுக்கும், மக்களுக்கும் செய்யும் மிகச் சிறந்த தொண்டாகும்.

— நன்றி: கூட்டுறவு

## சங்கக் கட்டிடத் திறப்பு விழா

ஏழாலை மேற்கு ஐ. நா. சங்கக் கட்டிடத்தைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் அண்மையில் திறந்து வைத்தார். திரு. இ. குணரத்தினம் தேவாரம் ஓதினார். பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்களின் முன்னுரையின் பின் செயலாளர் திரு. நா. இரத்தினம் அவர்கள் வரவேற்புரை கூறி அறிக்கையையும் வாசித்தார். தனாதிகாரி திரு. செ. சின்னத்துரை B. A. கணக்கறிக்கையை வாசித்தார். திரு. ம. சுப்பிரமணியம் ஏழாலை மகா வித்தியாலய அதிபர் திரு. சு. அம்பலவாணர் B. A. ஸ்ரீகாமம் வடக்கு ஐக்கிய மேற்பார்வைச் சபை, ஏழாலை தெற்கு ஐ. நா. சங்கம் ஆகியவற்றின் தலைவரான திரு. வீ. ஆர். முருகேசு ஆகியோரும் உரை நிகழ்த்தினர். திரு. சி. சண்முகவடிவேல் நன்றி கூறினார். திரு. வ. பேரின்பநாயகம் தேவாரம் ஓதினார்.

# மரம் நாட்டு விழா

க. சி. குலரத்தினம்

வடக்கில் அசோக சக்கரவர்த்தியும், தெற்கில் முடியுடை வேந்தராகிய சேரர், சோழர், பாண்டியரும் ஆண்ட காலம் முதலாக நம்மவர் பலவிதமான விழாக்களைக் கொண்டாடி வந்தார்கள். அவை கடற்கரையிலும் ஆற்றோரங்களிலும் காடுகளிலும் திருக்கோயில்களிலும் மலையடிவாரங்களிலும் பலவிதமாக நடைபெற்றன.

பழைய விழாக்களில் வனமகோற்சவம் எனப்படும் மரம் நாட்டு விழாவும் ஒன்று. அது நாட்டின் நன்மைக்காகவே நடைபெற்றது. இயற்கையன்னை நமக்களித்துள்ள இணையற்ற செல்வங்களுள் தாவரங்களும் ஒரு பகுதியாகும். தாவரங்கள் என்னும்போது புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகிய சங்கமத்தையே கருதுதல் வேண்டும்.

முற்காலத்தவர் மரம் நாட்டும் விழாவை நடாத்திய வகையை இன்று நாம் கவனிக்கும்போது அது தர்மச் செயலாகவும், நாகரீகப் பண்பாகவும் பொருளாதார முயற்சியாகவும் நமக்குத் தோன்றுகிறது. தர்மச் செயல்களுள் நிழல் மரம்நடுதல், கேணி, குளந்தோண்டுதல், சுமைதாங்கி அமைத்தல், ஆவுரிஞ்சிக் கல்நடுதல், அம்பலங்கள் சத்திரங்கள் ஆகிய தங்குமடங்கள் அமைத்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் முதலியன அடங்கும்.

முற்காலத்து மன்னர்கள் தங்கள் அரண்மனைகளுக்கு அருகாமையில் நகர்ப்புறத்தில் உபவனம், பூங்கா எனப்படும் தோப்புக்களை அமைத்துப் பரிபாலித்து விளையாட்டயர்ந்து வந்தார்கள். நெடுஞ்சாலை வழியே இருமருங்கிலும் பயன்தரும் மரங்களை நிழலுக்காக நாட்டி நன்மை செய்தார்கள். அதனால் யாத்திரிகள் போக்குவரத்துக்குவசதிகள் இருந்தன. அன்றிப் பறவையினங்கள் தம் விருப்பம் போலக் கூடுகட்டியும் வாழ்ந்தன.

## கார்த்திகைப் புராணம்

வனமகோற்சவத்தைப் பற்றியும் அதன் நன்மையைப் பற்றியும் அதனால் உண்டாகும் பயனைப்பற்றியும் கார்த்திகைப்புராணத்தில் ஒரு செய்யுள் நயம்படக் கூறுகிறது. கார்த்திகை மாதத்து வளர்பிறைக்காலத்தில் ஓர் அரசு, ஓர் ஆல், ஒரு வேம்பு, மூன்று விளா, மூன்று வில்வம், மூன்று நெல்லி, பத்துப் புளி, ஐந்து மா, ஐந்து தென்னை ஆகிய ஒன்பது வகையான மரங்களையும் நாட்டுபவர்களுக்கு நரக வேதனை இல்லை என்று புராணம் கூறுகிறது.

ஓர் அரசு ஆலும் வேம்பும்
ஒரு பதின் புளியும் மூன்று
ஒருடன் விளவும் வில்வம்
மூன்றுடன் சிறந்த நெல்லி
பேர்பெறு மாவை ஐந்து தென்னை
பெருகு மாறுநடும் என்றும்
யார் பயிர் செய்தாரேனும்
அவர்க்கு இல்லை நரகம் தானே.

யோன் மொரீஸ் என்னும் அமெரிக்கர் தம் இளமைக் காலத்தில் ஒரு பெரிய மர நிழலில் அமர்ந்து படித்தும் விளையாடியும் அம்மரத்தோடு நன்கு பழகியவர். அவர் வளர்ந்து பெரிய புலவராய் இருந்த காலத்தில் அம்மரத்தின் சொந்தக்காரன் அதனை ஒரு விறகுவெட்டிக்கு விற்றதால் அவன் அதனைத் தறிப்பதற்கு ஆயுதமாகக் கோடரியைத் தட்டினான். அதைக் கண்டு பதைபதைத்த புலவர் கண்ணீர்விட்டுப் புலம்பியழுது, விறகு வெட்டிக்கு வேண்டியளவு பொருள் கொடுத்து அதனை வெட்டவிடாமல் தடுத்து நெஞ்சை உருக்கும் பாடல்களையும் பாடினார். அப்பாடல்களை வெள்ளைக்கால் சுப்பிரமணிய முதலியார் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

விறகு வெட்டி போயே விறகு வெட்டிபோயே
ஐயனார் இம்மரம் வெட்டுதல் தவிர்தி.
இதன் ஒரு கிளையையும் எறிதரேல் எறிதரேல்
இளமையில் எனக்கே இன்நிழல் ஈந்தது
ஆதலின் இதனையிவ் வமயம் காப்பன் யான்
என்மூ தாதையெம் இல்லிருக் கெதிரே
தன்கையால் வைத்துத் தான்வளர்த் ததுஇது
வைத்த இடத்தே மன்னுக. நின்கைக்
கோடரி கொண்டு குறைத்திட விடுகலேன்
மன்னே. பழகிய மரந்தரு இதன்சீர்
பாரினும் கடலினும் பரவிய இதன்நீ

சாறிந்து வீழ்த்திட எண்ணலு மாமோ?
வெட்டிடும் நினைவை விட்டுடு மறந்து
பலதலை முறைகள் பார்த்தபாதவம இதன்
கண்பிணியாக்கை மடிந்திடத் தடிந்திடேல்,
விண்பிணி விருப்பொடு மேக்கு நோக்கி
ஓங்குறு மிதுபிழைத் துய்ய அருளுதி.
தெரியாச் சிறுவரைச் சிறியேன் திரிநாள்
மலர்தரு மிதனிழல் நாடியமர்ந்துளேன்.
இதனைக் கீறாகவென எழிலுடைத் தவனகயர்
மிகுகளி பொங்க விளையா டினர்காண்.
இதுவே அன்னை என்னைமுத் தாயிடம்
தந்தை யென்னைத் தழீஇயது மித்தலம்
இவையெலாம் நினைந்தெனை விருகண் பனிக்கும்
கண்ணீர் எளிமை கண்டெனை இகழேல்.
மன்ற இம்மரம் நின்றிட விடுதி.
என்றும் மறக்கொணா இனிய தாருவே!
மன்புநேய! நின்மரவுரிமான என்
இசையநார் நினைச்சூழ்ந் திருகப் புல்லுமால்
பழந்தரு வேநின் பாலுறீஇப் பறவைகள்
பாடுக, நிழலின் ஆடுக. என்றும
நெடும்புயற் கிடையாது நிலைநின்று வாழி!
சருளறி பலஇந் தாளாழ்விட் டேகுஇதைத்
காக்க என்கையுள காறும்
திகுநிலை கோடரி செய்யல் லாதே.

நாம் எத்தனையோ விழாக்களையும் வாரங்களையும் ஆண்டுதோறும் கொண்டாடுகிறோம். சிலவிழாக்களில் ஆடம்பரமாகச் செலவிட்டுப் பணப்பையின் பாரத்தைக் குறைத்துக் கவலைப்படுகிறோம். உரிமை வாரம், சுகாதார வாரம், நூலக வாரம், தந்தை வாரம், தாய் வாரம் என்றெல்லாம் கொண்டாடுகிறோம். இனி மேல் மரம் நாட்டு வாரம் என்றொரு வாரத்தைக் கொண்டாடி வளத்தைப் பெருக்குவோமாக.

ஆதுகாறும் நாம் அறிந்தவற்றால் நாம் எம்மால் இயன்ற அளவுக்கு எம் பிற்சந்ததியாருக்காகவும் பிறருக்காகவும் நாட்டுக்காகவும் செய்யும் நற்பணிகளில் மரம் நாட்டுதல் ஒன்றாகும் எனத் திடமாகக் கருதுவோம். நிலமுள்ள இடங்களிலும் நெடுஞ்சாலையோரங்

களிலும் குளக்கரைகளிலும் கோயில் வீதிகளிலும் பயனுள்ள மரங்களை நாட்டுவோம்.

எங்கள் நாட்டில் வேலியோரங்களில் மரங்கள் இல்லை. வேலிகள் மதில்களாக மாறி வருகின்றன. பழையகாலத்துப் படலைக் கொட்டில்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. வெய்யிலிற் பதைத்து வருபவருக்கு ஒதுங்க நிழலில்லை. ஆகவே நிழல் தரு மரங்களை நாட்டுதல் எம் தலையாய கடனாகும். மரம் நாட்டுவதோடு மரந் தறித்தலையும் நாம் இயன்றளவு குறைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பித்த காலத்தில் இற்றைக்கு 175 ஆண்டுகளுக்கு முன் நாட்டப்பட்ட மலைவேம்பு நிழல்வாடி முதலிய மரங்கள் இன்று ஆறாயிரம் ஏழாயிரம் ரூபாவாக விற்கப்பட்டுத் தறிக்கப்படுகின்றன. அவ்விடங்களில் வேம்பு முதலிய பயன்தரு மரங்களையும் நெடுஞ்சாலைவழியே ஆல், வேம்பு முதலிய மரங்களையும் நாட்டுவதற்கு முயற்சி செய்வோமாக.

---

(17ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு நிறுவனங்களை உருவாக்குவார்கள்.'

கூட்டுறவு உறுப்பினர் கல்வித்திட்டம் நிறைய இடர்களைச் சந்திக்கும் நிலையில் உள்ளது. மிகவும் கடுமையான இடர்ப்பாடு எதுவென்றால் கூட்டுறவு நிறுவனங்களின்உறுப்பினர்களின் வெறுப்பு. சிறந்த வரலாற்றுப் பேராசிரியர் அர்னால்டு ரொபின்சி கூறியவாறு 'கூட்டுறவாளர்க்கு கல்வி புகட்டும் திட்டத்தின் வெற்றிக்கு மிகப் பெரிய தடையாக உள்ளது. தகுதியான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்சிரமமோ மிகுந்த செலவோ காரணமல்ல, கூட்டுறவாளர்களின் வெறுப்புத்தான் காரணம்.'

கூட்டுறவு உறுப்பினர்களிடம் உள்ள வெறுப்பின் விளைவாக ஏற்படும் சிக்கல் வளர்ச்சியடையாத நாடுகளில் புதுமையான தல்ல; வளர்ந்துள்ள பலநாடுகளில் இச்சிக்கல் மிகவும் அழுத்தமாக உள்ளது. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு உள்ள எதிர்ப்பு மிகவும் நெருக்கடியை உண்டாக்கியுள்ளது. நன்றி: கூட்டுறவு

(வளரும்)

## வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு    ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| நாடகம், நடனம் | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் .. .. | 200-00 |
| இசை நிகழ்ச்சிகள் | | |
| | இரவு .. .. | 175-00 |
| | பகல் .. .. | 150-00 |
| ஏனைய நிகழ்ச்சிகள் | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| திருமணம் - பகல் அல்லது இரவு | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| சினிமா | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7238



Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.